<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | வெங்கடேஷன் | நாள் | 09.08.2024 |
| தகப்பனார் பெயர் | பையாலு | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை :–</u>**

1) நான் மேட்டூர் நகராட்சியில் கடந்த 10 மாதங்களாக பணியாற்றி வருகிறேன். மேட்டூர் நகராட்சி ஏற்படுத்துவதற்கு முன்னர் கிராம ஊராட்சியாகவோ, பேரூராட்சியாகவோ இருந்ததா என்றால், தேர்வு நிலை பேரூராட்சியாக இருந்தது. எந்த வருடத்தில் அவ்வாறு தேர்வு நிலை பேரூராட்சியாக இருந்தது என்றால், வருடம் சரியாக தெரியவில்லை.

2) ஒரு வீட்டிற்கு குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் குழாய் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்றால், அது குடியிருப்பு பகுதியாக இருந்தால் மட்டும் தான் வழங்க இயலும் என்றால், சரிதான். வாதியின் வீட்டிற்கு கழிவுநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி வீட்டின் கதவு எண், வரி விதிப்பு எண் ஆகியவை என்னவென்றால், க.எண்.AAA, வரிவிதிப்பு எண் வருவாய் ஆய்வாளரிடம் உள்ளது. பொதுவாக கதவு எண் AAA என இருக்க வாய்ப்பில்லை என்றால், சரிதான்.

3) வாதியின் வீட்டிற்குரிய வீட்டுவரி, குடிநீர் வரி ஆகியவை குறித்த ஆவணங்கள் நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால், சரிதான். மேற்படி ஆவணங்களை பரிசீலித்தால்தான் அது குறித்து பதிலளிக்க முடியும் என்றால், சரிதான்.

(தேவையான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கால அவகாசம் கோரியதன் பேரில் வா.சா.4 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.